ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

விவரங்கள் ஆகக்கடைசியாக
30 டிசம்பர் 2021 புதுப்பிக்கப்பட்டன

# என் குடும்பத்தைப் பராமரிக்கிறேன்



# வாழ்க்கைப் பயணத்தை மேம்படுத்துவோம்

நீங்கள் வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், சரியான ஆதரவும் உதவியும் கிடைத்தால் வாழ்க்கைப்பயணம் சுமுகமாக அமையும். திருமணம் செய்தல், குடும்பத்தைத் தொடங்குதல், வயதான பெற்றோர்களைப் பராமரித்தல், புதிய வேலை தேடுதல் அல்லது ஓய்வுக்காலத்திற்குத் திட்டமிடுதல் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து கட்டங்களுக்கும் இது பொருந்தும்.

இந்தக் கையேடுகள் தொடரில், சுகாதாரப் பராமரிப்பு, குடியிருப்பு, வாழ்நாள் கற்றலும் வாழ்வாதாரமும் கல்வி போன்ற வாழ்க்கை விவகாரங்கள் தொடர்பான அரசாங்கக் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய மேலோட்டமான விவரங்களையும் குறிப்புகளையும் நீங்கள் காணலாம். வாழ்க்கையின் அடுத்த கட்டத்தைத் தொடங்கவும், எதிர்பாராத சவால்களைச் சமாளிக்கவும், முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் பொருத்தமான வாய்ப்புகளைக் கண்டறியவும் நீங்கள் நன்கு விவரமறிந்திருக்க இந்தத் தொடர் துணை புரியும்.

இந்தத் தொடரில் மூன்று கையேடுகள் உள்ளன:

என் குடும்பத்தைப் பராமரித்திடலாம்
என் வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைந்திடலாம்
நம் மூத்தோரைப் பராமரிக்கிறோம்

**AKK கையேடுகளின் அண்மைப் பதிப்பை மக்கள் கழகத்தின் www.pa.gov.sg/akk! இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யுங்கள்!**

## காப்பி காக்கிகளிடம் கேளுங்கள்!

கென்னும் அவனது காக்கிகளும்* அன்பான புன்சிரிப்புக்கும் கலகலப்பான பேச்சுக்கும் அக்கம்பக்கம் முழுவதும் நன்கு அறியப்பட்டவர்கள். கென் அண்மை நடப்புகள் பற்றி அனைவருக்கும் உடனுக்குடன் தகவல் அளிப்பார். உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால், அவரிடம் சென்றால் போதும். அவர் நம்பகமானவர். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் தொடங்குவதற்கு உதவும் பயன்மிக்க தகவலையும் அறிவுரையையும் பெறுவதற்கான குறிப்புகளும் தொடர்புகளும் அவருக்குத் தெரியும். உங்களுக்குப் பயனளிக்கக்கூடிய அரசாங்கத் திட்டங்கள் பற்றியும் அவர் சுருக்கமாகவும் எளிமையாகவும் பகிர்ந்து கொள்வார்!




எல்லோரையும் போல, கென்னும் வாழ்க்கையில் சில பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார். ஆனால், அவரது நம்பிக்கைக்குரிய காக்கிகளைப் போல, பல உதவும் கரங்கள் இருப்பதை அனுபவத்தின்மூலம் அவர் தெரிந்து கொண்டார். எங்கு சென்று, யாரிடம் கேட்பது என்பதை நீங்கள் தெரிந்து கொண்டாலே போதும். எனவே, உங்களுக்கு உதவியும் ஆதரவும் தேவைப்பட்டால், கென் அல்லது அவரது காக்கிகளிடம் கேளுங்கள்!

**காக்கிகள் - நல்ல நண்பர்களைக் குறிக்கும் பேச்சுவழக்குச் சொல்*

# ஒவ்வொரு கட்டத்திலும், உங்களுக்குத் துணையாக நிற்கிறோம்

1 பணச்சுமை இல்லாமல் உங்கள் இல்லத்தை அமைத்திடுங்கள் Pg 4 - 8

- புதிய வீட்டுரிமையாளர்களுக்கான முன்னுரிமைத் திட்டங்கள்
- முதல்முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்
- இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்

2 அதிக கவலைகளின்றி குடும்பத்தைத் தொடங்குங்கள் Pg 9 - 11

- மெடிசேவ் பிரசவ உதவித் திட்டம்
- கருத்தரிக்க உதவும் சிகிச்சைகளுக்கு மெடிசேவ்

3 நம் பிள்ளைகளுக்குச் சிறந்த வாழ்வை அளித்திடுவோம் Pg 12 - 24

- பிறப்பிலிருந்து மெடிஷீல்டு லைஃப் பாதுகாப்பு
- குழந்தைப் பராமரிப்பு, கைக்குழந்தைப் பராமரிப்பு மானியங்கள்
- எடுசேவ் கல்விச்சேமிப்பு

4 உங்களது வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவி பெறுங்கள் Pg 25 - 32

- பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு
- சமூக சுகாதார உதவித் திட்டம்
- கொம்கேர்

5 இயலாமை உள்ள பெரியவர்களுக்கு ஆதரவு Pg 33 - 37

- இல்லம் சார்ந்த பராமரிப்புச் சேவைகள்
- கேர்ஷீல்டு லைஃப்
- மெடிசேவ் கேர்

6 கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம் Pg 38 - 40

- பெற்றோர் நிவாரணம் / தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / வாழ்க்கைத்துணை நிவாரணம்
- வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்
- பராமரிப்பளிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம்



# பணச்சுமை இல்லாமல் உங்கள் இல்லத்தை அமைத்திடுங்கள்

## Pg 4 - 8



இப்பகுதியில் உள்ள ஆதரவுத் திட்டங்களுடன் உங்கள் வாழ்நாளுக்கான இல்லத்தை அமைத்திடுங்கள்:

- புதிய வீட்டுரிமையாளர்களுக்கான முன்னுரிமைத் திட்டங்கள்
- முதல்முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்
- இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# மகிழ்வளிக்கும் இல்லம்

*பணச்சுமை இல்லாமல் உங்கள் இல்லத்தை அமைத்திடுங்கள்*

## புதிய வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளுக்கு விண்ணப்பம் செய்வோருக்கான முன்னுரிமைத் திட்டங்கள்

பின்வரும் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றின்கீழ் புதிய வீட்டுக்கு விண்ணப்பம் செய்து, வீட்டைத் தேர்ந்தெடுக்க வரிசை எண் பெறும் வாய்ப்பினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.



### பிள்ளைபெறு முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், முதல்முறையாக வீடு வாங்கும் திருமணமான தம்பதிகளுக்கானது. இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யும்போது, சிங்கப்பூர் குடியுரிமையுள்ள முதல் குழந்தையைத் தம்பதியர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டும், அல்லது 18 வயதுக்குக் குறைவான குறைந்தது ஒரு பிள்ளை இருக்கவேண்டும்.

### திருமணமான பிள்ளைக்கான முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், பெற்றோருடன் சேர்ந்து வாழும் அல்லது அருகில் (4 கிலோமீட்டர் தூரத்திற்குள்) வாழும் திருமணமான பிள்ளைகளுக்கானது.

### மூன்றாவது பிள்ளைக்கான முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், இரண்டு பிள்ளைகளுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கானது.

### பல-தலைமுறையினர் முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் (BTO) அதே குடியிருப்பில் வீடு வாங்க விண்ணப்பம் செய்யும் திருமணமான பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உரியது.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**




உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

### இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான உதவித் திட்டம்


- இரண்டாவது முறையாக வீடு வாங்க விண்ணப்பம் செய்வோர், விவாகரத்தானோர், அல்லது 18 வயதுக்குக் குறைவான குறைந்தது ஒரு சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளை உள்ள வாழ்க்கைத்துணையை இழந்தோர் ஆகியோருக்கானது.

### வாடகைதாரர் முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், வாடகை வீடுகளில் வசிப்போர் முதல் முறையாகவும் இரண்டாவது முறையாகவும் சொந்த வீடு வாங்க விரும்புவோருக்கானது.




## முதல்முறையாக வீடு வாங்குவோருக்கான வீட்டு மானியங்கள்




### முதல்முறையாக வீடு வாங்குவோர்

- இதற்குமுன் மானிய விலையில் வீடு வாங்காதவர்களை இது குறிக்கிறது.
- மானிய விலையில் வீடு வாங்குவதற்கு, குடும்பத்தின் சராசரி மாத வருமானம் $14,000க்கு (குடும்பங்கள்) / $7,000க்கு (திருமணமாகாதவர்கள்) மேற்போகக்கூடாது.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## மேம்படுத்தப்பட்ட மத்திய சேம நிதி வீட்டு மானியம்

- சராசரி குடும்ப வருமானத்தின் அடிப்படையில் $80,000 வரையிலான வீட்டு மானியம் பெறலாம். இதற்கான வருமான வரம்பு $9,000.
- இந்த மானியத்தைப் பெறுவதற்கு வீட்டு வகைக்கு அல்லது அமைவிடத்திற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாது. அதோடு, புதிய, மறுவிற்பனை வீடுகள் இரண்டுமே மானியத்திற்குத் தகுதிபெறும்.

## முதல்முறையாக வீடு வாங்கும் குடும்பங்களுக்கான மானியங்கள்

- முதல்முறையாகப் புதிய வீடு வாங்கும் குடும்பங்கள், வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து புதிய வீட்டை நேரடியாக வாங்கும்போது கிடைக்கும் குறிப்பிடத்தக்க சந்தை விலைக்கழிவுகளுக்கு மேலாக, $80,000 வரையிலான மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியமும் பெறலாம்.
- மறுவிற்பனை வீடு வாங்குவோர் $160,000 வரையிலான வீட்டு மானியங்களை அனுபவிக்கலாம். இதில் மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியம், குடும்ப மானியம் ($50,000 வரை), நெருக்கம் ஊக்குவிக்கும் வீட்டு மானியம் ($30,000 வரை) ஆகியன உள்ளடங்கும்.

## திருமணமாகாதவர்களுக்கான மானியங்கள்

- 35 வயதும் அதற்கு மேலான வயதுமுடைய திருமணமாகாதவர்கள், முதிர்ச்சி அடையாத குடியிருப்புப் பேட்டைகளிலுள்ள 2-அறை நீக்குப்போக்கான வீடுகளை வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து முதல்முறையாக வாங்கும்போது $40,000 வரையிலான மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியத்தை (திருமணமாகாதவர்கள்) பெறுவார்கள்.
- மறுவிற்பனை வீடு வாங்குவோர் $80,000 வரையிலான வீட்டு மானியங்களைப் பெறுவார்கள். இதில் மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியம் (திருமணமாகாதவர்கள்), திருமணமாகாதவர்களுக்கான வீட்டு மானியம் ($25,000 வரை), நெருக்கம் ஊக்குவிக்கும் வீட்டு மானியம் ($15,000 வரை) ஆகியன உள்ளடங்கும்.

## திருமணமாகாத பெற்றோர்களுக்கான வீட்டுத் தெரிவுகள்

- திருமணமாகாத பெற்றோர்களின் பிள்ளைகள் வளர்வதற்கு நிலையான வீடு இருப்பதை உறுதிசெய்ய, 21 வயதுக்கு மேலான திருமணமாகாத பெற்றோர்கள், முதிர்ச்சி அடையாத குடியிருப்புப் பேட்டைகளில் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 3-அறை வீடு வரை, அல்லது மறுவிற்பனை வீடு வாங்க அனுமதிக்கப்படுகிறது.
- பிள்ளையின் நலனைக் காப்பதற்காக, ஒவ்வொரு கோரிக்கையும் முழுமையாகவும் தனிப்பட்ட முறையிலும் பரிசீலிக்கப்படும். எந்தவொரு வீடும் வாங்க வசதி இல்லாதவர்கள், பொது வாடகை வீடுகளில் தங்குவது பற்றி யோசிக்கலாம்.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான வீட்டு மானியங்கள்




ஏற்கனவே மானிய விலையில் வீடு வாங்கிவிட்டு, இரண்டாவது முறையாக வீடு வாங்குவோரும் வீட்டு மானியங்களுடன் நன்மை அடையலாம்!



## ஸ்டெப்-அப் மத்திய சேம நிதி வீட்டு மானியம்

- இரண்டாவது முறையாக வீடு வாங்கும் குடும்பங்கள், முதிர்ச்சி அடையாத பேட்டையிலுள்ள தற்போதைய 2-அறை வீட்டிலிருந்து முதிர்ச்சி அடையாத பேட்டையிலுள்ள 3-அறை வீட்டுக்கு மாறிச்செல்லும் போது இந்த மானியம் கிடைக்கும்.
- பொது வாடகை வீடுகளில் குடியிருந்துகொண்டு, இரண்டாவது முறையாக வீடு வாங்கும் குடும்பங்கள், முதிர்ச்சி அடையாத பேட்டைகளில் 2-அறை அல்லது 3-அறை வீடு வாங்குவதற்கும் இந்த மானியம் கிடைக்கும்.
- தகுதிபெறும் குடும்பங்களுக்கு $15,000 வரையிலான மானியம் கிடைக்கும்.
- இந்த மானியம் புதிய வீடுகளுக்கும் மறுவிற்பனை வீடுகளுக்கும் பொருந்தும்.

## புதுத்தொடக்க வீட்டுத் திட்டம்

- பிள்ளைகளுடன் பொது வாடகை வீட்டில் தங்கியிருக்கும் குடும்பங்கள், இரண்டாவது முறையாக வீடு வாங்குவதற்கு இத்திட்டம் துணை புரிகிறது.
- பெற்றோர்(கள்) 35 வயது முதல் 55 வயதுக்குக் குறைந்தவராகவும், சிங்கப்பூர் குடியுரிமையுள்ள 18 வயதுக்குக் குறைவான குறைந்தது ஒரு பிள்ளை உள்ளவராகவும் இருக்கவேண்டும்.
- சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் சமூக மதிப்பீட்டுக் கடிதத்திற்குக் குடும்பங்கள் தகுதிபெறவேண்டும்.
- இத்திட்டம் 45 முதல் 65 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட குத்தகைக்காலம் கொண்ட 2-அறை நீக்குப்போக்கான வீட்டை வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைக்காலம், வீட்டின் உரிமையாளர்கள், வாழ்க்கைத்துணை, தங்கியிருப்போர் ஆகியோருக்கு 95 வயது வரை நீடிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு நிலையான இல்லம் இருப்பதை உறுதிப்படுத்த, குறைந்தபட்சம் 20 ஆண்டு குடியிருப்புக் காலக்கட்டத்துடன் வீடு விற்கப்படும்.
- குடும்பங்களுக்கு $35,000 வரையிலான மானியம் கிடைக்கும்.

## மத்திய சேம நிதி வீடு மேம்பாடு மானியத் திட்டம்

- ஏற்கனவே திருமணமாகாதவர்களுக்கான மத்திய சேம நிதி வீட்டு மானியத்தைப் பெற்றவர்கள் (i) மானியத்தைப் பெற்றபோது திருமணமாகாமல் இருந்து, இப்போது சிங்கப்பூர் குடியுரிமை உள்ளவரை அல்லது நிரந்தரவாசியைத் திருமணம் செய்திருந்தால், அல்லது (ii) குடியுரிமை இல்லாத வாழ்க்கைத்துணையுடன் சேர்ந்து வீடு வாங்கிய பிறகு, வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை சிங்கப்பூர் குடியுரிமை அல்லது நிரந்தரவாசத் தகுதி பெற்றிருந்தால், கூடுதலாக இந்த மானியம் கிடைக்கும்.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# அதிக கவலைகளின்றி குடும்பத்தைத் தொடங்குங்கள்

# Pg 9 - 11







உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# குழந்தைகளின் வரவு

*அதிக கவலைகளின்றி குடும்பத்தைத் தொடங்குங்கள்*



இத்தனை ஆதரவுத் திட்டங்கள் நடப்பில் இருப்பதால், நான் அதிக மனநிம்மதியுடன் **பிள்ளைகளைப் பெற்று வளர்க்கத் தொடங்கலாம்**.

## மெடிசேவ் பிரசவ உதவித் திட்டம்

- பெற்றோர்கள் பிரசவத்திற்கு முந்திய மருத்துவச் செலவுகளுக்காக மெடிசேவ் கணக்கிலிருந்து $900 வரை எடுக்கலாம். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் முதல் இரண்டு நாட்களுக்கு, ஒரு நாளுக்கு $550 வரையிலும், மூன்றாவது நாளிலிருந்து ஒரு நாளுக்கு $400 வரையிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். பிரசவ முறையைப் பொறுத்து, அறுவை சிகிச்சைக்குக் கூடுதலாக $750 முதல் $2,600 வரை எடுக்கலாம்.

## கருத்தரிக்க உதவும் சிகிச்சைகளுக்கு மெடிசேவ்

- கருத்தரிக்க சிரமப்படும் தம்பதிகள் கருத்தரிக்க உதவும் தொழில்நுட்ப (ART) சிகிச்சைகள் இதில் உள்ளடங்கும்.
- தம்பதிகள் தங்களது முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் அடுத்தடுத்த சிகிச்சை சுழல்களுக்குத் தங்களது மெடிசேவ் கணக்கிலிருந்து முறையே $6,000, $5,000 மற்றும் $4,000 வரை எடுக்கலாம். வாழ்நாளில் அதிகபட்சமாக $15,000 வரை மட்டுமே பயன்படுத்த முடியும்.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## பொது மருத்துவமனைகளின் கருத்தரிக்க உதவும் சிகிச்சைகளுக்கு மேம்பட்ட இணை நிதி

- கருத்தரிப்பதற்கு மருத்துவ உதவி தேவைப்படும் தம்பதிகளுக்கு உதவக்கூடிய IVF, IUI போன்ற செயற்கை கருத்தரிப்பு முறைகள் இதில் உள்ளடங்கும்.
- பொது மருத்துவமனைகளில் கருத்தரிக்க உதவும் தொழில்நுட்ப (ART) சிகிச்சைகள் நாடும் தகுதிபெறும் தம்பதிகள், அதிகபட்சமாக 3 புதிய மற்றும் 3 உறைந்த ART கருத்தரிப்புச் சுழல்களுக்கு அரசாங்கத்திடமிருந்து 75% வரை ($7,700 வரை) இணை நிதி பெறலாம்.
- பொது AR நிலையங்களில் IUI கருத்தரிப்பு சிகிச்சைகள் பெறும் தகுதிபெறும் தம்பதிகள், 3 IUI சிகிச்சை சுழல்கள் வரை, ஒவ்வொரு சுழலுக்கும் 75% வரை இணை நிதி பெறலாம். இதற்கு $1,000 வரம்பு உண்டு.
- கருத்தரிக்க முயலும் பெண்ணின் வயது 40 அல்லது அதைவிட அதிகமாக இருந்தால், ஆறு ART சிகிச்சை சுழல்களில் இரண்டு சுழல்கள் வரை அவருக்குச் செய்யப்படலாம். ஆனால், அந்தப் பெண் 40 வயதுக்கு முன்பாக ART அல்லது IUI சிகிச்சைகள் செய்து பார்த்தவராக இருக்கக்கூடாது.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**




**போர்க்காலப் படைவீரர்கள் திருமணம் செய்து கொள்ளும்போது அல்லது குழந்தை பெறும்போது $100 பெறுமானமுள்ள பற்றுச்சீட்டுகளைப் பெறுவார்கள்!**

**தற்காப்பு அமைச்சு: 1800 367 6767**
**www.ns.sg**

# நம் பிள்ளைகளுக்குச் சிறந்த வாழ்வை அளித்திடுவோம் Pg 12 - 24



இந்தப் பகுதியில், உங்கள் குடும்பம் மற்றும் பிள்ளைகளின் சுகாதாரப் பராமரிப்பு, குழந்தைப் பராமரிப்பு, கல்வித் தேவைகள் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்:

- பிறப்பிலிருந்து மெடிஷீல்டு லைஃப் பாதுகாப்பு
- குழந்தைப் பராமரிப்பு, கைக்குழந்தைப் பராமரிப்பு மானியங்கள்
- எடுசேவ் கல்விச்சேமிப்பு



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# வளரும் பருவம்

*உங்கள் பிள்ளைகளுக்கு ஆகச்சிறந்த தொடக்கத்தை அமைத்துக் கொடுங்கள்*




## பிறந்த குழந்தைகளுக்கு மெடிசேவ் மானியம்

- சிங்கப்பூர் குடியுரிமையுடன் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் தங்களது மெடிசேவ் கணக்கில் $4,000 மானியம் பெறுவார்கள். குழந்தையின் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளுக்கு இந்த மானியம் துணை புரியும். மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள், குழந்தைகளுக்குப் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகள், மருத்துவமனையில் தங்கியிருக்கும் செலவு, அங்கீகரிக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைகள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

**மத்திய சேம நிதிக் கழகம்: 1800 227 1188**
**www.cpf.gov.sg**

## பிறப்பிலிருந்து மெடிஷீல்டு லைஃப் பாதுகாப்பு

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள எல்லாக் குழந்தைகளும் பிறப்பிலிருந்து வாழ்நாள் முழுவதும் தானாகவே மெடிஷீல்டு லைஃப் காப்புறுதித் திட்டப் பாதுகாப்பைப் பெறுவார்கள். பிறவி நோய்களும் பிறந்த புதிதில் உண்டாகும் நோய்களும் இதில் உள்ளடங்கும்.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## குழந்தை போனஸ் திட்டம் - ரொக்க அன்பளிப்பு

- இந்த ரொக்க அன்பளிப்பு, ஆரம்ப ஆண்டுகளில் குழந்தையை வளர்ப்பதற்காகும் செலவுகளைச் சமாளிக்க பெற்றோர்களுக்கு உதவுகிறது.
  - முதல் மற்றும் இரண்டாவது பிள்ளைக்கு $8,000.
  - மூன்றாவது மற்றும் அதற்கடுத்த பிள்ளைகளுக்கு $10,000.
- 1 அக்டோபர் 2020 முதல் 30 செப்டம்பர் 2022 வரை பிறக்கும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகளின் பெற்றோர்கள், குழந்தை போனஸ் ரொக்க அன்பளிப்போடு, ஒருமுறை மட்டும் $3,000 ரொக்க மானியமும் பெறலாம்.

## பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு

- இந்தச் சிறப்பு சேமிப்புக் கணக்கில் பெற்றோர் சேமிக்கும் ஒவ்வொரு வெள்ளிக்கும் அரசாங்கம், ஒரு வரம்பு வரை, இணை நிதி வழங்கும்.
  - ஒவ்வொரு பிள்ளையின் மேம்பாட்டுக் கணக்கிலும் அரசாங்கம் $3,000 பங்களிக்கும் (அதாவது, பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு தொடக்க மானியம்). பெற்றோர்கள் பிள்ளை மேம்பாட்டுக் கணக்கில் எதுவும் சேமிக்காமலேயே இந்த மானியத்தைப் பெறுவார்கள்.
  - தொடக்க மானியத்திற்கு மேலாகத் தொடர்ந்து சேமிக்கும் பெற்றோர்கள், பிள்ளையின் பிறப்பு வரிசையைப் பொறுத்து, $3,000 முதல் $15,000 வரை இணை நிதி பெறுவார்கள்.

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (குழந்தை போனஸ் திட்டம்): 1800 253 7707**
**www.babybonus.msf.gov.sg**




கவலை வேண்டாம்! உங்கள் குழந்தையின் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகள் முதல் அன்றாடச் செலவுகள் வரை அனைத்திற்கும் ஆதரவு உண்டு!

## புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பாஸ்போர்ட் விண்ணப்பக் கட்டணம் தள்ளுபடி

- 2019 ஜனவரி 1 அல்லது அதற்குப் பிறகு பிறந்த குழந்தை சிங்கப்பூர் குடிமக்களாக இருந்தால் அவர்களின் முதல் கடவுசீட்டுக்கு(passport) விண்ணப்பிக்கும் பெற்றோருக்கு விண்ணப்பக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

**குடிநுழைவு சோதனைச்சாவடி ஆணையம்: 6391 6100**
**www.ica.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# கைக்குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளின் பராமரிப்பு

பாலர் பள்ளிகளில் இருக்கும் இடங்களின் எண்ணிக்கை ஏற்கனவே 180,000க்கு இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில், 80% பிள்ளைகளுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் பாலர் பள்ளியில் இடம் கிடைக்கும்.



## குழந்தைப் பராமரிப்பு, கைக்குழந்தைப் பராமரிப்பு மானியங்கள்

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளைகளை, பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பின் உரிமம்பெற்ற குழந்தைப் பராமரிப்பு நிலையங்களில் சேர்த்திருக்கும் குடும்பங்கள், ஒவ்வொரு மாதமும் கைக்குழந்தைப் பராமரிப்புக்கு $600 வரையிலும், குழந்தைப் பராமரிப்புக்கு $300 வரையிலும் அடிப்படை மானியம் பெறுவார்கள்.
- வேலை செய்யும் தாய்மார்களைக் கொண்ட குடும்பங்களின் மொத்த மாத வருமானம் $12,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், பணவசதிச் சோதனையின் அடிப்படையில், ஒவ்வொரு மாதமும் கைக்குழந்தைப் பராமரிப்புக்கு $710 வரையிலும், குழந்தைப் பராமரிப்புக்கு $467 வரையிலும் கூடுதல் மானியம் பெறுவார்கள்.
- குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் காரணமாக (எ.கா. வேலை தேடுகிறார், கர்ப்பமாக இருக்கிறார், 24 மாதத்திற்குக் குறைவான வயதுடைய இளைய குழந்தையைப் பராமரிக்கிறார்) வேலை செய்யாத தாய்மார்களும் இந்த மானியங்களுக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொருவரது சூழ்நிலையின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.
- தகுதிபெறும் குறைந்த வருமானக் குடும்பங்கள், குழந்தைப் பராமரிப்பு நிதி உதவிக்கும் (அடிப்படை மற்றும் கூடுதல் மானியங்களுக்கு மேலாக) தொடக்க மானியத்திற்கும்கூட விண்ணப்பிக்கலாம்.
- வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பொது வாடகை வீட்டுத் திட்டத்தின்கீழ் இடம்பெறும் குடும்பங்கள் அல்லது கொம்கேர் ஆதரவு பெறும் குடும்பங்கள் விண்ணப்பம் செய்யும்போது, அதிகபட்ச பாலர் பள்ளி மானியத்திற்குத் தானாகவே தகுதி பெறுவார்கள். விண்ணப்பதாரரின் / ஒற்றைத் தந்தையின் வேலை நிலவரம் ஒரு பொருட்டாகக் கருதப்படாது.

## பாலர் பள்ளி கட்டண உதவித் திட்டம்

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளைகளை, இணை இயக்காளர்கள் அல்லது கல்வி அமைச்சு நடத்தும் பாலர் பள்ளிகளில் சேர்த்திருக்கும் குடும்பங்கள், மொத்த மாத வருமானம் $12,000 மற்றும் அதற்குக் குறைவாக இருக்கும் நிலையில், பணவசதிச் சோதனையின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் $170 வரை கட்டண உதவி பெறுவார்கள்.
- தகுதிபெறும் குறைந்த வருமானக் குடும்பங்கள், ஆண்டுக்கு $240 வரையிலான தொடக்க மானியத்திற்கும் விண்ணப்பிக்கலாம்.

**பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பு: 6735 9213**
**www.ecda.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## கிட்ஸ்டார்ட் திட்டம்

- கிட்ஸ்டார்ட் என்பது குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த 6 வயது வரையிலான சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளைகள் வாழ்க்கையில் நல்லதொரு தொடக்கத்தைப் பெற இயலச்செய்யும் திட்டமாகும்.
- இத்திட்டம், பிள்ளையின் மேம்பாட்டுக்குப் பெற்றோர்களுக்கு ஆதரவளிக்கிறது. அதோடு, தேவையானபோது குடும்பங்களுக்கான ஆதரவை ஒருங்கிணைத்து வலுப்படுத்துவதோடு, பிறப்பிலிருந்து பிள்ளைகளின் மேம்பாட்டையும் கண்காணிக்கிறது.
- கிட்ஸ்டார்ட் திட்டம் 2023க்குள் மேலும் 5,000 குடும்பங்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அடுத்த சில ஆண்டுகளில் விரிவுபடுத்தப்படும்.

**பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பு: 6735 9213**
**www.ecda.gov.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# 0 முதல் 6 வயதுடைய பிள்ளைகளுக்கான ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டம்

ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டம், 2019 முதல் பிள்ளைகளின் மாறுபட்ட தேவைகளுக்கு ஏற்ப மேலும் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை வழங்கி வருகிறது. அதிகமான நிதி உதவிகள், பரந்த வருமான நிபந்தனைகள் ஆகியவற்றுடன், இத்திட்டம் இப்போது மேலும் கட்டுப்படியாகி, அதிகமான குடும்பங்களுக்கு நன்மை அளிக்கிறது.

## a) கற்றல் ஆதரவுத் திட்டமும் வளர்ச்சி ஆதரவுத் திட்டமும்

- லேசான வளர்ச்சித் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்குப் பாலர் பள்ளிச் சூழலில் கற்றல் ஆதரவும் பயிற்சி சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

## b) கைக்குழந்தைகள், சிறுவர்களுக்கான ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டம்

- மிதமானது முதல் கடுமையான வளர்ச்சித் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்குப் பயிற்சி சிகிச்சையும் வளர்ச்சி சேவைகளும் வழங்கப்படுகின்றன.
- இரண்டு வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கான புதிய திட்டம், குழந்தையின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் குறுக்கீட்டு உத்திகளைப் பயன்படுத்த பெற்றோர்களுக்குக் கற்றுத் தருகிறது.
- தனியார் குறுக்கீட்டுச் சேவை வழங்குநர்களுக்கான மேம்படுத்தப்பட்ட முன்னோட்டத் திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் குறுக்கீட்டுச் சேவை நிலையங்கள் வழங்கும் மானியமுள்ள குறுக்கீட்டுத் திட்டங்களில் பிள்ளைகளைச் சேர்ப்பது குறித்து பெற்றோர்கள் யோசிக்கலாம்.

## c) வளர்ச்சி ஆதரவு பிளஸ் திட்டம்

- ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் போதிய முன்னேற்றம் அடைந்துள்ள பிள்ளைகள், பாலர் பள்ளி சூழலில் குறுக்கீட்டுச் சேவை பெறுவதற்கு இத்திட்டம் துணை புரிகிறது.

## d) ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்புத் திட்டம்

- லேசான சிறப்புத் தேவைகள் உள்ள பிள்ளைகள் (2 முதல் 6 வயதுள்ளவர்கள்) எதிர்காலத்தில் தொடக்கப்பள்ளிகளில் சேர்வதற்குத் தயார்ப்படுத்தும் குழந்தைப் பராமரிப்புத் திட்டம்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## 7 முதல் 18 வயதுடைய மாணவர்களுக்கான சிறப்பு மாணவர் பராமரிப்பு நிலையம்

- சிறப்புக் கல்வி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் பள்ளிக்கு முன்பும் பின்பும் பராமரிப்புச் சேவைகள் வழங்குகிறது.
- குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $9,200 அல்லது அதைவிடக் குறைவாகவோ, தனிநபரின் சராசரி வருமானம் $2,300 அல்லது அதைவிடக் குறைவாகவோ உள்ள குடும்பங்கள், பணவசதிச் சோதனையின் அடிப்படையிலான நிதி உதவிக்குத் தகுதி பெறுவார்கள்.

## சிறப்புத் தேவைகள் சேமிப்புத் திட்டம்

- சிறப்புத் தேவைகள் உள்ள பிள்ளைகளின் நீண்டகாலப் பராமரிப்புக்காகப் பெற்றோர்கள் தங்களது மத்திய சேம நிதி சேமிப்பை ஒதுக்கி வைப்பதற்கு இத்திட்டம் அனுமதிக்கிறது.
- பெற்றோரின் மறைவுக்குப் பிறகு, சிறப்புத் தேவைகள் உள்ள அன்புக்குரியவருக்கு நிலையான வழங்குதொகைகள் தொடர்ந்து கிடைப்பதற்குப் பெற்றோர்கள் ஏற்பாடு செய்யலாம்.

## சிறப்புத் தேவையுள்ளோருக்கான அறக்கட்டளை நிறுவன அறநிதி

- சிறப்புத் தேவைகள் உள்ளோருக்குக் கட்டுப்படியாகும் அறநிதிச் சேவைகளை இந்நிறுவனம் வழங்குகிறது. பராமரிப்பாளர் இறந்துவிட்டால் அல்லது இயலாமைக்கு உள்ளானால், உங்கள் அன்புக்குரியவருக்காக நிதிகளை நிர்வகிக்கும் அறங்காவலராக நிறுவனம் செயல்படும்.
- உங்கள் உயில், காப்புறுதி, மத்திய சேம நிதி சேமிப்பு ஆகியவற்றில் நீங்கள் விட்டுச்செல்பவை அனைத்தும் சிறப்புத் தேவைகள் உள்ள அன்புக்குரியவருக்குக் கிடைப்பதையும் அறநிதி உறுதி செய்யும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**

**Special Needs Trust Co Ltd: 6278 9598**
**www.sntc.org.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# பள்ளி செல்லும் பிள்ளைகளின் பராமரிப்பு

## உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு

- பெற்றோர்கள் பிள்ளைகளின் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்குப் பணம் சேமிக்க இந்தக் கணக்கு உதவுகிறது.
- பின்வரும் சூழ்நிலைகளில் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு தானாகவே தொடங்கப்படும்:
  - அரசாங்கத்தின் பங்களிப்புக்குப் பிள்ளை தகுதிபெறும் முதல் ஆண்டில்; அல்லது
  - பிள்ளையின் பிள்ளை மேம்பாட்டுக் கணக்கில் அல்லது கல்விக் கணக்கில் உள்ள இருப்புத்தொகை, உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்குக்கு மாற்றப்படும்போது.

**கல்வி அமைச்சு: 6260 0777**
**www.moe.edu.sg**


## மாணவர் பராமரிப்புக் கட்டண உதவி

- சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட மாணவர் பராமரிப்பு நிலையத்திற்குச் செல்லும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள அல்லது நிரந்தரவாசத் தகுதிபெற்ற (அதே வீட்டில் வசிக்கும் குடும்பத்தினரில் குறைந்தது ஒருவர் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றிருக்கவேண்டும்) மாணவர்கள் (7 முதல் 14 வயது), மாணவர் பராமரிப்புக் கட்டண உதவி பெறுவார்கள்.
- குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $4,500 மற்றும் அதற்குக் குறைவாகவோ, அல்லது தனிநபரின் சராசரி மாத வருமானம் $1,125 மற்றும் அதற்குக் குறைவாகவோ உள்ள குடும்பங்கள், மாணவர் பராமரிப்புக் கட்டண உதவியாக மாதத்திற்கு $290 வரை பெறத் தகுதி பெறுவார்கள். அதோடு, வைப்புத்தொகை, பதிவுக்கட்டணம், சீருடை, காப்புறுதி போன்ற ஆரம்பச் செலவுகளுக்கு, ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒருமுறை மட்டும் $400 வரையிலான தொடக்க மானியமும் பெறலாம்.

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (கொம்கேர்): 1800 222 0000**
**www.msf.gov.sg/comcare**

## கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டம்

- குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $2,750 மற்றும் அதற்கும் குறைவாகவோ, அல்லது தனிநபரின் சராசரி மாத வருமானம் $690 மற்றும் அதற்கும் குறைவாகவோ உள்ள குடும்பங்களைச் சேர்ந்த, அரசாங்கப் பள்ளிகளிலும், அரசாங்க ஆதரவுபெற்ற பள்ளிகளிலும், நிபுணத்துவப் பள்ளிகளிலும் பயிலும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- முழுமையான பள்ளிக் கட்டணம், வழக்கமான துணைக் கட்டணம், போக்குவரத்து நிதி உதவி (தொடக்கநிலை முதல் புதுமுகக் கல்வி வரை அனைத்து நிலைகளுக்கும்), இலவசப் பாடப்புத்தகம், பள்ளிச் சீருடை, பள்ளியில் சாப்பிட நிதி உதவி (தொடக்கநிலை, உயர்நிலை ஆகியவற்றுக்கு மட்டும்), வருடாந்தர ரொக்க உதவி நிதி (புகுமுகக் கல்விக்கு மட்டும்) ஆகியன இதில் உள்ளடங்கும்.





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## எடுசேவ் கல்விச்சேமிப்பு

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள மாணவர்கள் தங்களது எடுசேவ் கல்விச்சேமிப்பு நிதியைப் பயன்படுத்தி பின்வருபவற்றுக்குப் பணம் கட்டலாம்:
  - பள்ளிகள் ஏற்பாடு செய்யும் செறிவூட்டும் நிகழ்ச்சிகள்;
  - அரசாங்கப் பள்ளிகளிலும் அரசாங்க ஆதரவுபெறும் பள்ளிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட துணைக் கட்டணங்கள், தன்னாட்சிப் பள்ளிகளிலும் அரசாங்க ஆதரவுபெறும் பள்ளிகளிலும் துணைக் கட்டணங்கள்; அதோடு
  - பள்ளிகள் ஏற்பாடு செய்யும் மின்னிலக்கக் கற்றல் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளிகளிலும் தொடக்கக் கல்லூரிகளிலும் வாங்கப்படும் தனிப்பட்ட கற்றல் சாதனங்கள்.
- தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒவ்வோர் ஆண்டும் முறையே $230, 290 பெறுவார்கள்.

## எடுசேவ் கல்விச்சேமிப்பு தகுதிச்சிறப்பு உதவித்தொகை

- ஒவ்வொரு கல்வி நிலையிலும் (தொடக்கநிலை 1, 2 தவிர்த்து) தலைசிறந்த 25% மாணவர்களுள் இடம்பெறும் தகுதிபெறும் மாணவர்கள், கல்வி நிலையைப் பொறுத்து, $200 முதல் $500 வரை பெறுவார்கள்.
- அரசாங்க ஆதரவுபெற்ற பள்ளிகள், தொடக்கக் கல்லூரிகள்/மத்திய கல்விக் கழகங்கள், பலதுறைத் தொழில்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக்கழகங்கள் ஆகியவற்றில் பயிலும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள மாணவர்கள் இதற்குத் தகுதி பெறுவார்கள். அவர்களது குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $6,900 மற்றும் அதற்குக் குறைவாகவோ, அல்லது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,725 அல்லது அதற்குக் குறைவாகவோ இருக்கவேண்டும்.
- உதவி நிதித் தொகைகள் இப்போது PayNow (அடையாள அட்டை) வழியாகவும், சான்றிதழ்கள் அந்தந்தத் தொகுதி அலுவலகங்கள் வாயிலாகவும் வழங்கப்படுகின்றன.

## எடுசேவ் கல்விச்சேமிப்பு உபகாரச் சம்பளம்

- பள்ளி ஆண்டுத் தேர்வு முடிவுகளின் அடிப்படையில், தங்களது கல்வி நிலையில் தலைசிறந்த 10% மாணவர்களுள் இடம்பெறும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள மாணவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. கல்வி நிலையைப் பொறுத்து, மாணவர்கள் $350 அல்லது $500 பெறுவார்கள்.

பிள்ளையின் பள்ளி



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி நிலையங்களுக்கு அரசாங்கம் வழங்கும் கல்வி உதவி நிதி

- பொது நிதி பெறும் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி நிலையங்களில் பயிலும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள முழுநேர மாணவர்கள், குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $9,000 மற்றும் அதற்குக் குறைவாகவோ அல்லது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,250 மற்றும் அதற்குக் குறைவாகவோ இருக்கும் நிலையில், குடும்ப வருமானத்தைப் பொறுத்து, உயர்கல்வி சமூக உதவி நிதிக்கு அல்லது உயர்கல்வி உதவி நிதிக்குத் தகுதி பெறுவார்கள்.

| கல்வி நிலை | கல்வி ஆண்டு 2021 முதல் வருடாந்தர கல்வி உதவி நிதித் தொகை |
|---|---|
| தொழில்நுட்பக் கல்விக்கழக நைடெக் மற்றும் மேல்நிலை நைடெக் மாணவர்கள் | **$400 - $1,500**<br>(அடிமட்ட வருமானப் பிரிவில் இருப்பவர்களுக்கு 100% கல்விக் கட்டண நிதி உதவியும் கிடைக்கும்) |
| டிப்ளோமா மாணவர்கள் | **$850 - $2,750** |
| பட்டக்கல்வி மாணவர்கள் (மருத்துவத்துறை / பல் மருத்துவத்துறை மாணவர்கள் தவிர்த்து) | **$1,350 - $6,200** |
| சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக / நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக மருத்துவத்துறை, பல் மருத்துவத்துறை மாணவர்கள் | (கல்வி ஆண்டு 2021ல் சேர்க்கப்படும் மாணவர்கள்)<br>**$5,300 - $19,300**<br>(சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்)<br>**$10,700 - $24,700**<br>(நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்) |

- பொது நிதி பெறும் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி நிலையங்களில் பயிலும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பகுதிநேர மாணவர்கள், குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $9,000 மற்றும் அதற்குக் குறைவாகவோ அல்லது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,250 மற்றும் அதற்குக் குறைவாகவோ இருக்கும் நிலையில், உயர்கல்வி உதவி நிதிக்குத் தகுதி பெறுவார்கள்.

| கல்வி நிலை | கல்வி ஆண்டு 2021 முதல் வருடாந்தர கல்வி உதவி நிதித் தொகை |
|---|---|
| தொழில்நுட்பக் கல்விக்கழகத்தின் பகுதிநேர நைடெக் மற்றும் மேல்நிலை நைடெக் மாணவர்கள் | **$140** |
| பகுதிநேர டிப்ளோமா | **$300 - $800** |
| பகுதிநேரப் பட்டக்கல்வி மாணவர்கள் | **$700 - $2,500** |

**கல்வி அமைச்சு: 6260 0777**
**www.moe.edu.sg**

## பயணச் சலுகை அட்டைகள்

- 7 வயதுக்குக் குறைவான பிள்ளைகள், செல்லுபடியாகும் சலுகை அட்டையுடன் இலவசமாகப் பயணம் செய்யலாம்.
- தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்களுக்கும், தேசிய சேவையாளர்களுக்கும்:

| | அடிப்படை பேருந்து சேவையில் எண்ணற்ற பயணங்கள் | ரயிலில் எண்ணற்ற பயணங்கள் | அடிப்படை பேருந்து சேவையிலும் ரயிலிலும் எண்ணற்ற பயணங்கள் |
|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி மாணவர்கள் | $24.00 | $21.00 | $43.50 |
| உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் (தொடக்கக் கல்லூரி / தொழில்நுட்பக் கல்விக்கழக மாணவர்கள் உட்பட) | $29.00 | $26.50 | $54.00 |
| முழுநேர டிப்ளோமா மாணவர்கள்* | $29.00 | $26.50 | $54.00 |
| முழுநேர பட்டக்கல்வி மாணவர்கள்* | $55.50 | $48.00 | $90.50 |
| முழுநேர தேசிய சேவையாளர்கள் | $55.50 | $48.00 | $90.50 |

**தனியார் கல்வி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் படித்துக் கொண்டிருக்கும், அல்லது வீட்டிலிருந்து சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக்கல்விச் சான்றிதழ் வழக்கநிலை, சாதாரண நிலை அல்லது மேல்நிலைத் தேர்ச்சிக்கு, அல்லது அனைத்துலக பெக்கலாரட் தேர்ச்சிக்குப் படித்துக் கொண்டிருக்கும் தகுதிபெறும் மாணவர்கள் இதில் உள்ளடங்குவர்.*

**டிரான்சிட்லிங்க்: 1800 2255 663**
**www.transitlink.com.sg**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# பெற்றோருக்கான விடுப்பும் அனுகூலத் திட்டங்களும்




## அரசாங்கம் பணம் தரும் மகப்பேறு விடுப்பு

- 12 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தையின் வேலை செய்யும் தாய்மார்கள் (சொந்தத் தொழில் செய்வோர் உட்பட) 16 வாரங்களுக்கு அரசாங்கம் பணம் தரும் மகப்பேறு விடுப்பு பெறுவார்கள்.

## அரசாங்கம் பணம் தரும் தந்தையர் விடுப்பு

- 12 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தையின் வேலை செய்யும் தந்தையருக்கும் (சொந்தத் தொழில் செய்வோர் உட்பட), 12 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய குழந்தையைத் தத்தெடுக்கும் தந்தையருக்கும் 2 வாரங்களுக்கு அரசாங்கம் பணம் தரும் தந்தையர் விடுப்பு கிடைக்கும்.

## பகிர்ந்து கொள்கிற பெற்றோர் விடுப்பு

- 12 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தையின் வேலை செய்யும் தந்தையர் (சொந்தத் தொழில் செய்வோர் உட்பட), மனைவியின் 16 வார மகப்பேறு விடுப்பில் அதிகபட்சம் 4 வார விடுப்பைப் பகிர்ந்து கொள்ளலாம். இது மனைவியின் சம்மதத்திற்கு உட்பட்டது.

## தாய்மாருக்கான தத்தெடுப்பு விடுப்பு

- 12 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய குழந்தையைத் தத்தெடுக்கும் வேலை செய்யும் தாய்மார்கள் (சொந்தத் தொழில் செய்வோர் உட்பட), தத்துக் குழந்தையைப் பராமரிக்க 12 வாரத் தத்தெடுப்பு விடுப்புக்குத் தகுதி பெறுவார்கள்.

**அரசாங்கம் பணம் தரும் விடுப்புத் திட்டங்கள்: 1800 253 4757**
**www.profamilyleave.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## அரசாங்கம் பணம் தரும் மகப்பேறு அனுகூலம்

- தங்களது வேலை ஏற்பாடுகளின் காரணமாக அரசாங்கம் பணம் தரும் மகப்பேறு விடுப்புக்குத் தகுதிபெறாத வேலை செய்யும் தாய்மார்கள், சிங்கப்பூர் குடியுரிமையுள்ள தங்களது குழந்தை பிறந்த தேதிக்கு முன்பான 12 மாதங்களில் குறைந்தது 90 நாட்களுக்கு வேலை செய்திருந்தால், இந்த அனுகூலத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

## அரசாங்கம் பணம் தரும் தந்தையர் அனுகூலமும் அரசாங்கம் பணம் தரும் தத்தெடுப்பு அனுகூலமும்

- தங்களது வேலை ஏற்பாடுகளின் காரணமாக அரசாங்கம் பணம் தரும் தந்தையர் விடுப்புக்கு அல்லது தத்தெடுப்பு விடுப்புக்குத் தகுதிபெறாத வேலை செய்யும் தந்தையரும் (சொந்தத் தந்தையும் தத்தெடுத்த தந்தையும்) தத்தெடுத்த தாய்மாரும், 2021 டிசம்பர் முதல், அரசாங்கம் பணம் தரும் தந்தையர் அனுகூலத்திற்கு அல்லது தத்தெடுப்பு அனுகூலத்திற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், சிங்கப்பூர் குடியுரிமையுள்ள அவர்களது குழந்தை பிறந்த தேதிக்கு அல்லது முறையாகத் தத்தெடுத்த தேதிக்கு முன்பான 12 மாதங்களில் குறைந்தது 90 நாட்களுக்கு அவர்கள் வேலை செய்திருக்க வேண்டும்.

## அரசாங்கம் பணம் தரும் குழந்தைப் பராமரிப்பு விடுப்பு

- வேலை செய்யும் பெற்றோரின் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள கடைசிப் பிள்ளை 7 வயதுக்குக் குறைவானவராக இருந்தால், ஓர் ஆண்டில் 6 நாட்கள் குழந்தைப் பராமரிப்பு விடுப்பு கிடைக்கும்.

## நீட்டிக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்பு விடுப்பு

- வேலை செய்யும் பெற்றோரின் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள கடைசிப் பிள்ளை 7 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவராக இருந்தால், ஒவ்வொரு பெற்றோருக்கும் ஓர் ஆண்டில் 2 நாட்கள் நீட்டிக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்பு விடுப்பு எடுக்கலாம்.
- இரு வயதுப் பிரிவுகளிலும் பிள்ளைகள் இருந்தால் (அதாவது, 7 வயதுக்குக் குறைவான பிள்ளையும், 7 முதல் 12 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளையும்), ஒவ்வொரு பெற்றோரும் ஓர் ஆண்டில் மொத்தமாக அதிகபட்சம் 6 நாட்கள் விடுப்பு எடுக்கலாம்.

**அரசாங்கம் பணம் தரும் விடுப்புத் திட்டங்கள்: 1800 253 4757**
**www.profamilyleave.gov.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE


People's Association

# உங்களது வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவி பெறுங்கள்

## Pg 25 - 32

இந்தப் பகுதியில், அன்றாடச் செலவுகளைச் சமாளிக்க உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உதவும் பல்வேறு திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்:

- பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு
- சமூக சுகாதார உதவித் திட்டம்
- கொம்கேர்






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# நல்வாழ்வு

## உங்களது வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவி பெறுங்கள்




கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக நிச்சயமற்ற தன்மையைக் கையாள்வதில் குடும்பங்களுக்கு உதவ பின்வரும் நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### சேவை, பராமரிப்பு கட்டணத் தள்ளுபடிகள்

- வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) வீடுகளில் வசிக்கும் தகுதிபெறும் குடும்பங்கள், வீட்டின் வகையைப் பொறுத்து, நிதி ஆண்டு 2021ல் 1.5 முதல் 3.5 மாதத்திற்கான சேவை, பராமரிப்பு கட்டணத் தள்ளுபடிகளைப் பெறுவார்கள்.

| வீவக வீட்டு வகை | நிதி ஆண்டு 2021ல் கட்டணத் தள்ளுபடி கிடைக்கும் மாதங்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏப்ரல் 2021 | ஜூலை 2021 | அக்டோபர் 2021 | ஜனவரி 2022 | நிதி ஆண்டு 2021க்கான மொத்தம் |
| 1 மற்றும் 2 அறை வீடு | 1 | 1 | 1 | 0.5 | 3.5 |
| 3 மற்றும் 4 அறை வீடு | 1 | 0.5 | 0.5 | 0.5 | 2.5 |
| 5 அறை வீடு | 0.5 | 0.5 | 0.5 | 0.5 | 2.0 |
| எக்சிகியூட்டிவ் / பல தலைமுறை வீடு | 0.5 | 0.5 | 0.5 | - | 1.5 |

*சேவை, பராமரிப்புக் கட்டணங்கள் பற்றி விவரம் கேட்டறிய, தயவுசெய்து உங்களது நகர மன்றத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 1800 866 3078**
**www.hdb.gov.sg**

**நிதி அமைச்சு: 1800 222 2888**
**www.mof.gov.sg**

## பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கத் தொகை

- குறைந்த வருமானம் ஈட்டும் தகுதிபெறும் சிங்கப்பூரர்களின் உடனடித் தேவைகளுக்கு ரொக்கத் தொகை வழங்குகிறது.
- இவர்களது வீட்டின் ஆண்டு மதிப்பைப் பொறுத்து $150 அல்லது $300 கிடைக்கும்.

**பொருள், சேவை வரி பற்றுச்சீட்டுக் குழு: 1800 222 2888**
**www.gstvoucher.gov.sg**

## பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ்

- தகுதிபெறும் வீவக வீடுகளின் பயனீட்டுக் கட்டணச் செலவைக் குறைக்க யு-சேவ் உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.
- நிதி ஆண்டு 2021ல், தகுதிபெறும் வீவக வீடுகள் அனைத்திற்கும், வழக்கமான யு-சேவ் உதவித்தொகையுடன், ஒருமுறை மட்டும் சிறப்பு உதவித்தொகையும் கிடைக்கும்.

| வீவக வீட்டு வகை | வழக்கமான பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ் | பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ் (சிறப்புத் தொகை) | நிதி ஆண்டு 2021க்கான மொத்த பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ் |
|---|---|---|---|
| | ஏப்ரல் 2021, ஜூலை 2021, அக்டோபர் 2021, ஜனவரி 2022 மாதங்களில் 4 தவணைகளாக வழங்கப்படும் | ஏப்ரல் 2021, ஜூலை 2021 மாதங்களில் 2 தவணைகளாக வழங்கப்படும் | |
| 1 மற்றும் 2 அறை வீடு | $395 | +$200 | $595 |
| 3 அறை வீடு | $355 | +$180 | $535 |
| 4 அறை வீடு | $315 | +$160 | $475 |
| 5 அறை வீடு | $275 | +$140 | $415 |
| எக்சிகியூட்டிவ் / பல தலைமுறை வீடு | $235 | +$120 | $355 |

**எஸ்பி குழுமம்: 6671 7117**
**www.spgroup.com.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்




## மளிகைப் பொருட்களுக்கான பற்றுச்சீட்டுகள்

- குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்க உதவியாக, 2020ல் $300 பற்றுச்சீட்டுகளும், 2021ல் $100 பற்றுச்சீட்டுகளும் வழங்கப்படுகின்றன.
- ஒன்றுக்கு மேலான சொந்த வீடு வைத்தில்லாத, 1 அறை அல்லது 2 அறை வீவக வீட்டில் வசிக்கும் 21 வயதுக்கு மேலான சிங்கப்பூரர்களுக்கு இந்தப் பற்றுச்சீட்டுகள் கிடைக்கும்.
- 2021ஆம் ஆண்டுக்கான பற்றுச்சீட்டுகள், தகுதிபெறும் குடிமக்களின் அடையாள அட்டையில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரிக்கு 2021 அக்டோபர் மாதம் தபால்வழி அனுப்பி வைக்கப்படும்.
- மளிகைப் பொருட்களுக்கான பற்றுச்சீட்டுகளைப் பங்குபெறும் பேரங்காடிகளில் பயன்படுத்தலாம்.

**நிதி அமைச்சு: 1800 222 2888**
**www.go.gov.sg/csp2020**

## சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டு

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள அனைத்து குடும்பங்களும் 2021ல் $100 மதிப்புள்ள சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகளைப் பெறுவார்கள். இதன் விவரங்களை சமூக மேம்பாட்டு மன்றங்கள் பின்னர் அறிவிக்கும்.
- பங்குபெறும் குடியிருப்பு வட்டாரக் கடைகளிலும் உணவங்காடி நிலையங்களிலும் இந்தப் பற்றுச்சீட்டுகளைப் பயன்படுத்தலாம்.

## மெடிசேவ்500 மற்றும் மெடிசேவ்700

- ஒவ்வொரு நோயாளியும், நாட்பட்ட நோயைச் சமாளித்தல் திட்டத்தின்கீழ் இடம்பெறும் நாட்பட்ட நோய்களுக்கான வெளிநோயாளி சிகிச்சைகளுக்கும், அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கும், சுகாதாரப் பரிசோதனைகளுக்கும் மெடிசேவ் கணக்கிலிருந்து ஆண்டுக்கு $500 அல்லது $700 (சிக்கலான நாட்பட்ட நோய் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு) வரை எடுக்கலாம்.

## தடுப்பூசி நிதி உதவிகள்

- தகுதிபெறும் சிங்கப்பூரர்கள், தேசிய அளவில் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகளை CHAS தனியார் மருந்தகங்களில் போட்டுக்கொள்ள $35 முதல் $125 வரை நிதி உதவி பெறலாம்.
- பெரியவர்களுக்கான தேசிய தடுப்பூசித் திட்டத்தின்கீழ், தகுதிபெறும் சிங்கப்பூரர்கள் பலதுறை மருந்தகங்களில் தடுப்பூசிகள் போட்டுக்கொள்ள 75% வரை நிதி உதவி பெறலாம். முன்னோடி, மெர்டேக்கா தலைமுறையினர் கூடுதல் நிதி உதவி பெறுவார்கள்.

## இளம்பருவ வளர்ச்சிப் பரிசோதனைக்கான நிதி உதவிகள்

- உள்ளூர் வழிகாட்டிகளின்படி பரிந்துரைக்கப்படும் இளம்பருவ வளர்ச்சிப் பரிசோதனைக்குச் செல்லும் 0 முதல் 6 வயதுடைய சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகளுக்கு இந்த நிதி உதவிகள் கிடைக்கும்.
- தகுதிபெறும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகள், CHAS தனியார் மருந்தகங்களிலும் பலதுறை மருந்தகங்களிலும், பரிந்துரைக்கப்படும் ஏழு இளம்பருவ வளர்ச்சிப் பரிசோதனைகளுக்கும் முழு நிதி உதவி பெறலாம்.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

COMMUNITY HEALTH ASSIST SCHEME

## சமூக சுகாதார உதவித் திட்டம்

- சிங்கப்பூர் குடிமக்கள் தங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள பங்குபெறும் தனியார் மருந்தகங்களிலும் பல் சிகிச்சை மருந்தகங்களிலும் மருத்துவ, பல் மருத்துவ சிகிச்சைகளுக்குக் கட்டணச்சலுகைகள் பெறலாம்.
- சிங்கப்பூரர்கள் இப்போது www.chas.sg இணையத்தளத்தின் வாயிலாக இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

| CHAS விதிகள் | CHAS பச்சை அட்டை | CHAS ஆரஞ்சு அட்டை | CHAS நீல அட்டை |
|---|---|---|---|
| தனிநபர் மாதாந்திர குடும்ப வருமானம் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,000க்கு மேல் | $1,201 - $2,000 | $1,200 மற்றும் அதற்கும் குறைவு |
| வீட்டின் ஆண்டு மதிப்பு (AV) (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000க்கு மேல் | $13,001 - $21,000 | $13,000 மற்றும் அதற்கும் குறைவு |
| **CHAS கட்டணச்சலுகைகள்** | | | |
| சாதாரண நோய்கள்* (எ.கா. இருமல், சளி) | பொருந்தாது | ஒவ்வொரு வருகைக்கும் $10 வரையிலான கட்டணச்சலுகை | ஒவ்வொரு வருகைக்கும் $18.50 வரையிலான கட்டணச்சலுகை |
| குறிப்பிட்ட நாட்பட்ட நோய்கள்^ — சிக்கலற்றது | ஒவ்வொரு வருகைக்கும் $28 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $112 | ஒவ்வொரு வருகைக்கும் $50 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $200 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $320 |
| குறிப்பிட்ட நாட்பட்ட நோய்கள்^ — சிக்கலானது | ஒவ்வொரு வருகைக்கும் $40 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $160 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $320 | ஒவ்வொரு வருகைக்கும் $125 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $500 |
| குறிப்பிட்ட பல் மருத்துவச் சேவைகள் | பொருந்தாது | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $50 முதல் $170.50 வரையிலான கட்டணச்சலுகை (செயற்கைப் பல்வரிசை, பற்சிகரம், பல்வேர்க்குழி சிகிச்சை ஆகியவற்றுக்கு மட்டுமே) | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $11 முதல் $256.50 வரையிலான கட்டணச்சலுகை (செயற்கைப் பல்வரிசை, பற்சிகரம், பல்வேர்க்குழி சிகிச்சை ஆகியவற்றுக்கு மட்டுமே) |
| "Screen for Life" திட்டத்தின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரப் பரிசோதனை** | பரிந்துரைக்கப்பட்ட பரிசோதனை(கள்) மற்றும், தேவைப்பட்டால், பரிசோதனைக்குப் பிந்திய முதல் மருத்துவ ஆலோசனை ஆகியவற்றுக்கு நிலையான கட்டணமாக $5 | பரிந்துரைக்கப்பட்ட பரிசோதனை(கள்) மற்றும், தேவைப்பட்டால், பரிசோதனைக்குப் பிந்திய முதல் மருத்துவ ஆலோசனை ஆகியவற்றுக்கு நிலையான கட்டணமாக $2 | |

* *2020 முதல், ஒவ்வொரு நோயாளியும் சாதாரண நோய்களுக்காக ஒவ்வொரு நாள்காட்டி ஆண்டிலும் எல்லா CHAS மருந்தகங்களுக்கும் அதிகபட்சமாக 24 முறை வருகையளிக்கலாம்.*

** *இது உடல்பருமன், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், உயர் இரத்தக்கொழுப்பு, மார்பகப் புற்றுநோய், மலக்குடல் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் ஆகியவற்றுக்கான பரிசோதனைகளைக் குறிக்கிறது.*

^ *"சிக்கலற்றது" என்பது ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது. "சிக்கலானது" என்பது பற்பல நாட்பட்ட நோய்களுக்காக, அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது.*

*பல் சிகிச்சைக்கான நிதி உதவிகளின் முழுமையான விவரங்களை www.moh.gov.sg/chas இணையப்பக்கத்தில் காணலாம்.*

**CHAS நேரடித் தொலைபேசி சேவை: 1800 275 2427**
**www.chas.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## கொம்கேர் இடைக்கால உதவித் திட்டம்

- மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திற்கு அவசரமாக உடனடி உதவி தேவைப்படும் சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் உதவி வழங்குகிறது.
- குடும்பத்தின் மாத வருமானம் $1,900 அல்லது அதைவிடக் குறைவாகவோ, அல்லது குடும்பத்தின் தனிநபர் சராசரி வருமானம் மாதத்திற்கு $650 அல்லது அதைவிடக் குறைவாகவோ இருப்பவர்கள் இந்த உதவியைப் பெறலாம்.

## கொம்கேர் குறுகிய-இடைக்கால உதவித் திட்டம்

- வேலை தேடும் அல்லது நோயினாலோ பராமரிப்பளிக்கும் பொறுப்புகளாலோ தற்காலிகமாக வேலை செய்ய இயலாத சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் உதவி வழங்குகிறது. இவர்கள் குறைவான அல்லது அறவே வருமானம் இல்லாதவர்களாகவோ அல்லது குடும்ப ஆதரவு இல்லாதவர்களாகவோ இருக்கவேண்டும்.
- குடும்பத்தின் மாத வருமானம் $1,900 அல்லது அதைவிடக் குறைவாகவோ, அல்லது குடும்பத்தின் தனிநபர் சராசரி வருமானம் மாதத்திற்கு $650 அல்லது அதைவிடக் குறைவாகவோ இருப்பவர்கள் இந்த உதவியைப் பெறலாம்.

## கொம்கேர் நீண்டகால உதவித் திட்டம்

- நோயினால், முதுமையால் அல்லது உடற்குறையால் நிரந்தரமாக வேலை செய்ய இயலாததோடு, அன்றாடத் தேவைகளுக்கு மிகக் குறைவான அல்லது அறவே குடும்ப ஆதரவோ, சேமிப்போ, சொத்துகளோ இல்லாத சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் உதவி வழங்குகிறது.
- தகுதிபெறும் குடும்பங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவி:

| குடும்பத்தின் அளவு | உதவித் தொகை (அடிப்படை உதவிப் பிரிவு) |
|---|---|
| ஒருவர் | $600 |
| இருவர் | $1,000 |
| மூவர் | $1,400 |
| நால்வர் | $1,750 |
| பிள்ளைகளுக்குக் கூடுதல் உதவி | ஒவ்வொரு பிள்ளைக்கும் கூடுதலாக $150 |

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (கொம்கேர்): 1800 222 0000**
**www.msf.gov.sg/comcare**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# கொவிட்-19 நிலவரத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஆதரவு




கொவிட்-19 நிலவரத்தால் பலரது வேலைகளும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் காலக்கட்டத்தில் நிவாரணமும் நிதி ஆதரவும் வழங்கும் பின்வரும் திட்டங்களுடன் பாதிப்படைந்த சிங்கப்பூரர்கள் பயனடையலாம்.

## பெரியவர்களுக்கான போக்குவரத்து சலுகைகள்

- பெரியவர்கள் (சிங்கப்பூர் குடிமக்களும் நிரந்தரவாசிகளும்) மாதத்திற்கு $128 கட்டணத்தில் மாதப் பயண அட்டையை வாங்கிக்கொள்ளலாம்.

**டிரான்சிட்லிங்க்: 1800 2255 663**
**www.transitlink.com.sg**

## வெளிநாட்டு இல்லப் பணியாளர் தீர்வை சலுகை

- ஒரே வீட்டில் வசிக்கும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பின்வருவோரைப் பராமரிக்க வெளிநாட்டு இல்லப் பணியாளரை வேலைக்கு எடுக்கும் குடும்பங்கள் மாதத்திற்கு $60 சலுகை தீர்வையுடன் பயனடையலாம்:
  - 16 வயதுக்குக் குறைவான பிள்ளை; அல்லது
  - குறைந்தது 67 வயதுடைய முதியோர்; அல்லது
  - அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் குறைந்தது ஒன்றைச் செய்வதற்கு உதவி தேவைப்படும் இயலாமைகள் உள்ளவர்.

**மனிதவள அமைச்சு: 6438 5122**
**www.mom.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## துணிகரத் திட்டங்களுக்கான நிதி

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், பின்வரும் காரணங்களால் குறைந்தது 10% குடும்ப வருமானத்தை இழந்திருந்தால், ஒருமுறை மட்டும் **$500 முதல் $1,000** வரை உதவி வழங்கும் நிவாரணத் திட்டங்கள்:
  - குடும்ப உறுப்பினருக்கு கொவிட்-19 தொற்றியதால்
  - வீட்டிலேயே இருப்பதற்கான உத்தரவு, கட்டாய விடுப்பு, அல்லது வீட்டுத் தடைக்காப்பு ஆணையின்கீழ் வைக்கப்பட்டதால்
  - அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் குறைந்தது ஒன்றைச் செய்வதற்கு உதவி தேவைப்படும் இயலாமைகள் உள்ளவர்.
- பணியின்போது கொவிட்-19 தொற்றிய சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள், முன்னிலை ஊழியர்கள், சமூகத் தொண்டூழியர்கள் ஆகியோருக்கு ஒருமுறை மட்டும் **$3,000 முதல் $5,000** வரையிலான நிவாரணத் தொகை வழங்கப்படும்.
- கொவிட்-19 கிருமித்தொற்றினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒருமுறை மட்டும் **$10,000 முதல் $30,000** வரையிலான நிவாரணத் தொகை வழங்கப்படும்.

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (கொவிட்-19 ஆதரவு): 6355 6388**
**www.go.gov.sg/msf-covid19-support**

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (கொம்கேர்): 1800 222 0000**
**www.msf.gov.sg/comcare**

**தேசிய சமூகச் சேவை மன்றம்: 6210 2500**
**www.ncss.gov.sg/thecouragefund**

# இயலாமை உள்ள பெரியவர்களுக்கு ஆதரவு Pg 33 - 37






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# இயலாமை உள்ள பெரியவர்களுக்கு ஆதரவு

## பொதுப் போக்குவரத்து சலுகை

- பெரியவர்களுக்கான பொதுப் போக்குவரத்து கட்டணத்தில் 25% தள்ளுபடி பெறலாம். இவர்கள் 7.2 கிலோமீட்டருக்கு மேலான தூரம் பயணம் செய்வதற்குக் கூடுதல் கட்டணம் கிடையாது.
- இவர்கள் பேருந்திலும் ரயிலிலும் எண்ணற்ற பயணங்கள் செய்ய, $64 விலைக்கு மாதச் சலுகை அட்டையும் வாங்கலாம்.

**டிரான்சிட்லிங்க்: 1800 2255 663**
**www.transitlink.com.sg**

## தொண்டூழியச் சமூகநல அமைப்புகளின் போக்குவரத்து நிதி உதவி

- சிறப்புப் பள்ளிகளை அல்லது சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு நிதியளிக்கும் இயலாமை பராமரிப்புச் சேவைகளைச் சென்றடைய பிரத்யேக போக்குவரத்துக்கு விண்ணப்பிக்கலாம்.
- ஏற்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிரத்யேக போக்குவரத்தின் செலவுக்கு 80% வரை நிதி உதவி பெறலாம்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**

## டாக்சி நிதி உதவித் திட்டம்

- பள்ளிக்கு, வேலைக்கு அல்லது வேலை தொடர்பான பயிற்சிக்கு செல்ல டாக்சிகளையே முழுமையாகச் சார்ந்திருக்கும் இயலாமை உள்ளவர்களுக்கான திட்டம் இது.
- குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,800 மற்றும் அதைவிடக் குறைவாக உள்ளவர்கள் இத்திட்டத்திற்குத் தகுதி பெறுவார்கள்.
- குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானத்தைப் பொறுத்து, 80% வரை நிதி உதவி பெறலாம்.

## துணைபுரியும் தொழில்நுட்ப நிதி

- இயலாமைகள் உள்ளவர்களுக்குத் தேவைப்படும் துணைபுரியும் தொழில்நுட்பச் சாதனங்களின் செலவுக்கு, பணவசதிச் சோதனையின் அடிப்படையில், 90% வரை நிதி உதவி வழங்கப்படும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## இடைக்கால மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு சேவைகள்

- சுகாதார அமைச்சு அல்லது சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு நிதியளிக்கும் இல்லப் பராமரிப்புச் சேவை, பகல்நேரப் பராமரிப்பு நிலையங்கள் அல்லது இயலாமையுள்ள பெரியவர்களுக்கான இல்லங்கள் போன்றவற்றில் நீண்டகாலப் பராமரிப்பு தேவைப்படும் மூத்தோர்கள், இயலாமை உள்ளவர்கள் ஆகியோரின் கட்டணங்களுக்கு நிதி உதவி கிடைக்கும்.
- குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானத்தை அல்லது வீட்டின் ஆண்டு மதிப்பைப் பொறுத்து நிதி உதவித்தொகை நிர்ணயிக்கப்படும்.

## இடைக்கால மற்றும் நீண்டகாலப் பராமரிப்புக்கு மருந்து நிதி உதவித் திட்டம்

- சுகாதார அமைச்சின் நிதி உதவி பெறும் நோயாளிகள், தங்களுக்கு இடைக்கால மற்றும் நீண்டகாலப் பராமரிப்பளிக்கும் மருத்துவர்கள் தரும் மருந்துகளுக்கும் அதே விலையைக் கட்டுவார்கள். மருந்துகளை மானிய விலையில் வாங்குவதற்காக அவர்கள் பலதுறை மருந்தகங்களுக்கு அல்லது பொது மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியதில்லை.

**சுகாதார அமைச்சு: 1800 222 3399**
**www.moh.gov.sg**

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு: 6355 6388**
**www.msf.gov.sg**

## இல்லப் பராமரிப்பளிப்பு மானியம்

- தகுதிபெறும் பராமரிப்பு பெறுநர்கள், மூன்று அல்லது அதைவிட அதிகமான அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளைச் செய்வதற்கு ஓரளவு உதவி தேவைப்படுவோரைப் பராமரிப்பதற்காகும் செலவைச் சமாளிக்க உதவியாக, மாதந்தோறும் $200 ரொக்கத்தொகை பெறலாம்.

## இல்லம் சார்ந்த பராமரிப்புச் சேவைகள்

- இயலாமை உள்ள பெரியவர்களைக் கூடுமானவரை சமூகத்திலேயே வைத்திருக்கும் இலக்குடன், மாற்றுப் பராமரிப்பு ஆதரவு வழங்கப்படுகிறது.
- இந்தச் சேவைகளில் பயிற்சி சிகிச்சை, சுய சுகாதாரப் பராமரிப்பு, வீட்டைத் துப்புரவு செய்யும் பணி, மருந்து சாப்பிட நினைவூட்டல் போன்றவை உள்ளடங்கும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**



இப்புதிய திட்டங்களுடன் எனக்குத் தேவையான அனைத்து உதவியும் கிடைப்பதை அறிந்து மனநிம்மதி அடைகிறேன்!



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## கேர்ஷீல்டு லைஃப்

- கேர்ஷீல்டு லைஃப் என்பது நீண்டகாலப் பராமரிப்புக்கான காப்புறுதி திட்டமாகும். கடுமையான இயலாமைகள், குறிப்பாக முதுமைக்காலத்தில், நேரும்போது, நீண்ட காலத்திற்குத் தனிப்பட்ட மருத்துவப் பராமரிப்பு தேவைப்படலாம். அந்நிலையில், இத்திட்டம் சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் அடிப்படை நிதி ஆதரவு வழங்கும்.
  - 1980ல் அல்லது அதற்குப் பிற்பாடு பிறந்தவர்கள், 1 அக்டோபர் 2020 முதல், அல்லது 30 வயதை எட்டும்போது, தானாகவே மெடிஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள்.
  - 1979ல் அல்லது அதற்கு முன்பாகப் பிறந்தவர்கள், ஏற்கனவே கடுமையான இயலாமைகள் இல்லாவிட்டால், கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.
- கேர்ஷீல்டு லைஃப் மேம்பட்ட பாதுகாப்பும் மன நிம்மதியும் அளிக்கிறது:
  - பாலிசிதாரருக்குக் கடுமையான இயலாமைகள் இருக்கும் வரை, வாழ்நாள் முழுவதும் ரொக்க வழங்குதொகைகள் வழங்கப்படும்.
  - 2021ல் மாதாந்தர வழங்குதொகை $612. இது 67 வயது வரை அல்லது வழங்குதொகை கோரப்படும் வரை ஆண்டுதோறும் உயரும்.
  - காப்புறுதி சந்தாவைக் கட்டுப்படியாக்க அரசாங்கம் நிதி உதவிகள் வழங்குகிறது. சந்தாவைச் செலுத்த இயலாத காரணத்தால் ஒருவரும் காப்புறுதியை இழந்துவிடமாட்டார்கள்.
  - காப்புறுதி சந்தா முழுவதையும் மெடிசேவ் பயன்படுத்தி செலுத்திவிடலாம்.

**சுகாதார அமைச்சு: 1800 222 3399**
**www.careshieldlife.gov.sg**

## எல்டர்ஷீல்டு

- எல்டர்ஷீல்டு என்பது கடுமையான இயலாமைகளுக்கான காப்புறுதித் திட்டமாகும். கடுமையான இயலாமைகள் நேரும்போது, சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் குறிப்பிட்டதொரு காலக்கட்டத்திற்கு மாதந்தோறும் ரொக்கத் தொகை வழங்கும்.
- 1979ல் அல்லது அதற்கு முன்னதாகப் பிறந்தவர்கள், 40 வயதை எட்டியவுடன் தானாகவே திட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டனர். 1980ல் அல்லது அதற்குப் பிற்பாடு பிறந்தவர்கள், கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் தானாகவே சேர்க்கப்படுவார்கள்.
- எல்டர்ஷீல்டு 400 பாலிசிதாரர்களில் 1970 முதல் 1979 வரை பிறந்தவர்கள் கடுமையான இயலாமைகளால் பாதிக்கப்படாதிருந்தால், கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் தாமாகவே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். மற்றவர்கள் CSHL இணையப்பக்கத்திற்குச் சென்று பதிவு செய்யவேண்டும்.

**மத்திய சேம நிதி: 1800 227 1188**
**www.cpf.gov.sg**

**சுகாதார அமைச்சு: 1800 222 3399**
**www.careshieldlife.gov.sg**

## எல்டர்ஃபண்டு

- கடுமையான இயலாமைகள் உள்ள, குறைந்த வருமானம் பெறும் 30 வயதுக்கு மேலான சிங்கப்பூர் குடிமக்களுக்கு எல்டர்ஃபண்டு ஆதரவளிக்கிறது. இவர்கள் கேர்ஷீல்டு லைஃப், எல்டர்ஷீல்டு, அல்லது இயலாமையுள்ள மூத்தோருக்கான இடைக்கால உதவித் திட்டம் ஆகியவற்றால் பயனடையாதவர்களாகவும், மெடிசேவ் கணக்கில் குறைவான இருப்புத்தொகை உள்ளவர்களாகவும், நீண்டகாலப் பராமரிப்புத் தேவைகளுக்குப் போதிய தனிப்பட்ட சேமிப்பு இல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும்.
- தகுதிபெறும் சிங்கப்பூர் குடிமக்கள், அவர்கள் தொடர்ந்து தகுதிபெறும் வரையில், நீண்டகாலப் பராமரிப்புத் தேவைகளுக்கு உதவியாக ஒவ்வொரு மாதமும் $250 வரை ரொக்கம் பெறலாம்.

**ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு: 1800 650 6060**
**www.aic.sg/elderfund**

## மெடிசேவ் கேர்

- கடுமையான இயலாமைகள் உள்ள 30 வயதுக்கு மேலான சிங்கப்பூர் குடிமக்களும் நிரந்தரவாசிகளும், தங்களது நீண்டகாலப் பராமரிப்புத் தேவைகளுக்காக ஒவ்வொரு மாதமும் ரொக்கமாகப் பணமெடுக்க இத்திட்டம் அனுமதிக்கிறது.
- இவர்கள் தங்களது மெடிசேவ் இருப்புத்தொகையைப் பொறுத்து, சொந்தக் கணக்கிலிருந்து மற்றும்/அல்லது வாழ்க்கைத்துணையின் மெடிசேவ் கணக்கிலிருந்து $200 வரை (மொத்தமாக) எடுத்துக் கொள்ளலாம்.

| மெடிசேவ் இருப்புத்தொகை | ஒவ்வொரு மாதமும் எடுக்கக்கூடிய தொகை |
|---|---|
| $20,000 மற்றும் அதற்குமேல் | $200 |
| $15,000 மற்றும் அதற்குமேல் | $150 |
| $10,000 மற்றும் அதற்குமேல் | $100 |
| $5,000 மற்றும் அதற்குமேல் | $50 |
| $5,000க்கும் குறைவு | எதுவுமில்லை |

**மத்திய சேம நிதிக் கழகம்: 1800 227 1188**
**www.cpf.gov.sg**

**சுகாதார அமைச்சு: 1800 222 3399**
**www.moh.gov.sg**

ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

# கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம்
# Pg 38 - 40

வணக்கம் கென், எங்களைப் போன்ற வேலை செய்யும் பெற்றோர்களுக்கு என்ன ஆதரவு இருக்கிறது?

நீங்கள் தகுதி பெறக்கூடிய வரி நிவாரணங்களைப் பற்றி இந்தப் பகுதியில் தெரிந்து கொள்ளுங்கள்:

- பெற்றோர் நிவாரணம் / தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / வாழ்க்கைத்துணை நிவாரணம்
- வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்
- பராமரிப்பளிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம்








உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம்

*தனிநபர் வருமான வரி நிவாரணங்கள்*

## பெற்றோருக்கான நிவாரணம் / உடற்குறையுள்ள பெற்றோருக்கான நிவாரணம்

- தனது பெற்றோர், தாத்தா பாட்டி, வாழ்க்கைத் துணையின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி ஆகியோரை ஆதரிக்கும் தனிநபர்கள், $5,500 அல்லது $9,000 வரி நிவாரணம் கோரலாம். தங்களைச் சார்ந்திருப்பவருக்கு உடற்குறை இருந்தால், $10,000 அல்லது $14,000 வரி நிவாரணம் கோரலாம். தனிநபர்கள் ஒப்பந்தத்தின் பேரில் வரி நிவாரணத்தைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## உடற்குறையுள்ள சகோதர சகோதரிக்கான நிவாரணம்

- உங்களுடன் ஒரே வீட்டில் வசிக்கும், உங்கள் ஆதரவைச் சார்ந்திருக்கும் உடற்குறையுள்ள ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் அல்லது வாழ்க்கைத் துணையின் உடன்பிறப்புக்கும் $5,500 வரி நிவாரணம் கோரலாம்.

## வாழ்க்கைத் துணைக்கான நிவாரணம் / உடற்குறையுள்ள வாழ்க்கைத் துணைக்கான நிவாரணம்

- உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆண்டு வருமானம் $4,000க்கு மேற்போகாதிருந்தால் $2,000 வரி நிவாரணம் கோரலாம். உங்கள் வாழ்க்கைத்துணைக்கு உடற்குறை இருந்தால் $5,500 வரி நிவாரணம் கோரலாம்.

## ஆயுள் காப்புறுதி நிவாரணம்

- ஊழியரின் மத்திய சேம நிதி சந்தா, சொந்தத் தொழில் செய்வோரின் மெடிசேவ் / தன்விருப்பப்படியான மத்திய சேம நிதி சந்தா, தன்விருப்பப்படி மெடிசேவ் கணக்கில் ரொக்கமாக நிரப்பும் சந்தா ஆகியவற்றின் மொத்தத் தொகை 2020ல் $5,000க்கும் குறைவாக இருப்போருக்கு இந்த நிவாரணம் கிடைக்கும்.
- இரண்டில் குறைவானதற்கு நிவாரணம் கோரலாம்:
  - $5,000க்கும் உங்களது மத்திய சேம நிதி சந்தாவுக்கும் இடையிலான வேறுபாடு; அல்லது
  - உங்களுடைய / உங்கள் வாழ்க்கைத் துணையுடைய ஆயுள் காப்புறுதியின் மதிப்பில் அதிகபட்சம் 7%, அல்லது செலுத்தப்பட்ட காப்புறுதி சந்தாத் தொகை.
- திருமணமான ஆண் தனது மனைவியின் ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்குச் சந்தா செலுத்தினால், மனைவியின் ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்குச் செலுத்திய சந்தாவுக்கும் வரி நிவாரணம் கோரலாம்.

## மகப்பேறு வரிக் கழிவு

- திருமணமான, விவாகரத்தான அல்லது வாழ்க்கைத்துணையை இழந்த பெற்றோர்கள், பிள்ளையின் பிறப்பு வரிசையைப் பொறுத்து, $5,000 முதல் $20,000 வரையிலான வரி நிவாரணங்களைக் கோரலாம்.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 356 8300**
**www.iras.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணம்

- 16 வயதுக்குக் குறைவான அல்லது முழுநேரமாகப் படிக்கும், $4,000க்கு மேற்போகாத ஆண்டு வருமானம் பெறும் ஒவ்வொரு பிள்ளைக்கும் $4,000 வரி நிவாரணம் கோரலாம். உடற்குறையுள்ள பிள்ளையை ஆதரிக்கும் பெற்றோர்கள், ஒவ்வொரு பிள்ளைக்கும் $7,500 வரி நிவாரணம் பெறலாம்.
- வாழ்க்கைத்துணைகள் தங்களுக்கு இடையிலான விகித ஒப்பந்தப்படி, இவ்விரு பிள்ளை நிவாரணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

## வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார்கள் (திருமணமானவர்கள், விவாகரத்தானவர்கள் அல்லது துணையை இழந்தவர்கள்) பிள்ளையின் பிறப்பு வரிசையைப் பொறுத்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது வருமானத்தில் 15% முதல் 25% வரை வரி நிவாரணம் கோரலாம்.
- இந்த நிவாரணத்துடன் தகுதிபெறும் பிள்ளை / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணத்தையும் சேர்த்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் அதிகபட்சம் $50,000 நிவாரண வரம்பு உள்ளது.
- தனிநபர் வருமான வரி நிவாரணத்திற்கு $80,000 வரம்பு உள்ளது.

## பராமரிப்பளிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார்கள் (திருமணமானவர்கள், விவாகரத்தானவர்கள் அல்லது துணையை இழந்தவர்கள்), சிங்கப்பூர் குடியுரிமையுள்ள தங்களது பிள்ளைகளைப் (12 வயதும் அதற்குக் குறைவான வயதும் உடையவர்கள்) பராமரிக்க பெற்றோர், தாத்தா பாட்டி (வாழ்க்கைத் துணையின் பெற்றோர், தாத்தா பாட்டி உட்பட) ஆகியோரின் உதவியை நாடினால், $3,000 வரை வரி நிவாரணம் கோரலாம்.

## குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் தீர்வை நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார்களுக்குப் பள்ளி செல்லும் பிள்ளைகள் இருந்தால், முந்திய ஆண்டில் செலுத்திய குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண் தீர்வைக்கு (ஒரு பணிப்பெண்ணுக்கு) வரி நிவாரணம் கோரலாம்.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 356 8300**
**www.iras.gov.sg**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# பயனுள்ள தொடர்பு எண்கள்

| | | |
|---|---|---|
| **AIC** (ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு) | 1800 650 6060 | www.aic.sg |
| **CHAS** (சமூக சுகாதார உதவித் திட்டம்) | 1800 275 2427 | www.chas.sg |
| **CPFB** (மத்திய சேம நிதிக் கழகம்) | 1800 227 1188 | www.cpf.gov.sg |
| **ECDA** (பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பு) | 6735 9213 | www.ecda.gov.sg |
| **HDB** (வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்)<br>• சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள் | 6490 1111<br>1800 866 3078 | <br>www.hdb.gov.sg |
| **ICA** (குடிநுழைவு சோதனைச்சாவடி ஆணையம்) | 6391 6100 | www.ica.gov.sg |
| **IRAS** (சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்) | 1800 356 8300 | www.iras.gov.sg |
| **MINDEF** (தற்காப்பு அமைச்சு) | 1800 367 6767 | www.ns.sg |
| **MOE** (கல்வி அமைச்சு) | 6260 0777 | www.moe.edu.sg |
| **MOF** (நிதி அமைச்சு)<br>• பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுக் குழு<br>• மற்ற ஆதரவுத் திட்டங்கள் | 1800 222 2888<br>1800 222 2888<br>1800 222 2888 | www.mof.gov.sg<br>www.gstvoucher.gov.sg<br>www.supportgowhere.gov.sg |
| **MOH** (சுகாதார அமைச்சு)<br>• கொம்கேர்<br>• கேர்ஷீல்டு லை∴ப் | 6325 9220<br>1800 222 0000<br>1800 222 3399 | www.moh.gov.sg<br>www.msf.gov.sg/comcare<br>www.careshieldlife.sg |
| **MOT** (போக்குவரத்து அமைச்சு) | 6270 7988 | www.mot.gov.sg |
| **MSF** (சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு)<br>• குழந்தை போனஸ் திட்டம்<br>• கொம்கேர்<br>• கொவிட்-19 ஆதரவு<br>• அரசாங்கம் பணம் தரும் விடுப்புத் திட்டங்கள் | 6355 6388<br>1800 253 7707<br>1800 222 0000<br>6355 6388<br>1800 253 4757 | www.msf.gov.sg<br>www.babybonus.msf.gov.sg<br>www.msf.gov.sg/comcare<br>www.go.gov.sg/msfcovid19-support<br>www.profamilyleave.gov.sg/ |
| **NCSS** (தேசிய சமூகச் சேவை மன்றம்) | 6210 2500 | www.ncss.gov.sg/thecouragefund |
| **MOE** (தேசிய மக்கள் தொகை மற்றும் திறன் பிரிவு)<br>குடும்பங்களுக்காக அமைக்கப்பட்டது -<br>திருமணத்திற்கும் மகப்பேற்றுக்கும் கிடைக்கும்<br>ஆதரவின் மேலோட்டமான விவரம் | | www.madeforfamilies.gov.sg<br>www.go.gov.sg/mpbooklet |
| **எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை<br>உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்** | 1800 858 5885 | www.sgenable.sg |
| **SNTC** (Special Needs Trust Company Ltd) | 6278 9598 | www.sntc.org.sg |
| **எஸ்பி குழுமம்** | 6671 7117 | www.spgroup.com.sg |
| **டிரான்சிட்லிங்க்** | 1800 225 5663 | www.transitlink.com.sg |

இத்தகவல் மக்கள் கழகத்தின் மக்கள் மற்றும் அரசாங்க ஈடுபாட்டுப் பிரிவால் தொகுக்கப்பட்டது.
மேல்விவரம் அறிய, தயவுசெய்து மேற்காணும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

People's Association